பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# Refugeeship and the Feeling of Home: Murugan Worship among Sri Lankan Tamils in Switzerland

**Dr. Kameshwaran Envernathan Govender,** Postdoctoral Research Fellow, Faculty of Arts and Design,
Tshwane University of Technology, Arts Campus, Pretoria, South Africa.
**ORCiD: https://orcid.org/0009-0005-7209-9200**
**Samyuktha Pritham Chakravarthy,** Research Associate, Faculty of Arts and Design,
Tshwane University of Technology, Arts Campus, Pretoria, South Africa.
**ORCiD: https://orcid.org/0009-0002-0502-0177**
**Prof Nalini Moodley,** Executive Dean, Faculty of Arts and Design,
Tshwane University of Technology, Arts Campus, Pretoria, South Africa.
**ORCiD: https://orcid.org/0009-0004-5364-0455**
**DOI: 10.5281/zenodo.19533063**

## Abstract

*At the time of the Sri Lankan civil war in the 1980s, Tamil civilians sought refuge in several countries such as the United Kingdom and other European countries, Canada, Australia and India. Unlike in India, Sri Lankan Tamil refugees in Western countries were well integrated into host societies, were granted permanent residency, and, in many cases, obtained citizenship. However, they continued to follow their religious, cultural, and linguistic ties to their homeland. Lord Murugan has been taken by the diasporic Tamils wherever they have migrated. In the Western setting, everyone dedicates evenings and weekends to leisure and refreshment. Temples have emerged as important spaces of gathering for first and second-generation Tamil migrants. Beyond religious practice, these temples function as places of social interaction, cultural continuity and collective memory. This research explores Murugan worship in Switzerland by focusing on the Kulturverein Murugan Bern (Sri Kalyana Subramaniar Swamy Temple in Toffen, Bern). Beyond religiosity, the temple observes Maaveerar Naal (Martyrs' Day) every year to commemorate the sagacious martyrs of the Liberation Tigers of Tamil Eelam (LTTE). It features a carved map of Tamil Eelam on its walls. This paper examines how Murugan worship among Swiss Tamils becomes a space of comfort that expresses the ongoing longing for the homeland and its political freedom and serves as a means for cultural preservation within the refugee diaspora.*

**Keywords:** Murgan Temple, Murugan Worship, Swiss Tamils, Sri Lankan Refugee Tamils.

## References

[1] Alluri, R. M. "Political Remittances: The Post-war Transformation of the Tamil Swiss Diaspora." *Remittances as Social Practices and Agents of Change*, edited by S. Meyer and C. Ströhle, Palgrave Macmillan, 2023, Cham. https://doi.org/10.1007/978-3-030-81504-2_17
[2] Baumann, M. "Hinduism in Switzerland." *Handbook of Hinduism in Europe*, Brill, 2020, Leiden. https://doi.org/10.1163/9789004432284_063
[3] Boyle, F. A. *The Tamil Genocide by Sri Lanka.* 2nd ed., Clarity Press, 2016.
[4] Govender, K. E., and N. Moodley. "Murugan Worship and Thaipusam in South Africa." *Pandian Tamil Journal of Temple Studies*, vol. 5, no. 2, 2025.

[5] Malathy, N. *Fleeting Moment in My Country: The Last Years of the LTTE De-facto State.* Clarity Press, 2012.
[6] Sivanayagam, S. *Sri Lanka: Witness to History-A Journalist's Memoirs.* South Asia Books, 1995.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Heartfelt thanks to Dr. T. Sebulon Prabu Durai for editing this article.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# புலம்பெயர் வாழ்வில் ஆறுதல்: சுவிட்சர்லாந்தில் வாழும் இலங்கைத் தமிழர்களிடையே முருகன் வழிபாடு

**முனைவர் காமேஷ்வரன் என்வர்நாதன் கோவேந்தர்,** முனைவர் பட்ட மேலாய்வாளர், கலை மற்றும் வடிவமைப்புத் துறை, சுவானே தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கலை வளாகம், பிரிட்டோரியா, தென்னாப்பிரிக்கா.
**ORCiD: https://orcid.org/0009-0005-7209-9200**
**சம்யுக்தா பிரிதம் சக்கரவர்த்தி,** ஆய்வு இணைவர், கலை மற்றும வடிவமைப்புத் துறை, சுவானே தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கலை வளாகம், பிரிட்டோரியா, தென்னாப்பிரிக்கா.
**ORCiD: https://orcid.org/0009-0002-0502-0177**
**பேராசிரியர் நளினி முதலி,** நிர்வாகமையக் கல்லூரி தலைவர், கலை மற்றும வடிவமைப்புத் துறை, சுவானே தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கலை வளாகம், பிரிட்டோரியா, தென்னாப்பிரிக்கா.
**ORCiD: https://orcid.org/0009-0004-5364-0455**
**DOI: 10.5281/zenodo.19533063**

**ஆய்வுச்சுருக்கம்**

*1980களில் இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததன் விளைவாக, தமிழீழப் பொதுமக்கள் ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் அகதி அந்தஸ்தை பெற நாடினர். இந்தியாவுடன் ஒப்பிடுகையில், மேற்கத்திய நாடுகளில் தஞ்சம் பெற்ற இலங்கைத் தமிழ் அகதிகள், வெளிநாட்டு சமூகத்துடன் நன்று ஒருங்கிணைதனர், மற்றும் அவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு அனுமதியும், பல சந்தர்ப்பங்களில் குடியுரிமை சான்றிதழும் வழங்கப்பட்டது. இவ்வாறு சமூக வாழ்வில் இணைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் தங்களது தாயகத்துடனான மதம், பண்பாடு, மொழி சார்ந்த தொடர்புகளை தொடர்ச்சியாக பேணி வருகின்றனர். புலம்பெயர் தமிழர்கள் எங்கு சென்றாலும், முருகன் அவர்களுடன் தொடர்ந்து பயணித்து வந்துள்ளார். மேற்கத்திய சூழல்களில், மாலை நேரங்களும் வார இறுதிகளும் பொதுவாக ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக ஒதுக்கப்படும் நிலையில், முதல் மற்றும் இரண்டாம் தலைமுறை புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான முக்கியமான கூடுகைத் தளங்களாக கோவில்கள் அமைந்துள்ளன. மத வழிபாட்டிற்கு அப்பால், இந்த ஆலயங்கள் சமூகச் சந்திப்பு, பண்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் சமூக நினைவு ஆகியவற்றின் தளங்களாக அமைந்துள்ளன. இந்த ஆய்வு, சுவிட்சர்லாந்தில் நிலவும் முருகன் வழிபாட்டு நடைமுறைகளை ஆராய்கிறது; அதில் குறிப்பாக, பேர்ண் மண்டலத்தின் தொப்பன் (Toffen, Bern) பகுதியில் அமைந்துள்ள 'ஸ்ரீ கல்யாண சுப்ரமணியர் சுவாமி ஆலயம்' (Kulturverein Murugan Bern) மையமாகக் கொள்ளப்படுகிறது. மத வழிபாட்டிற்கு அப்பால், இவ்வாலயம் ஆண்டுதோறும் மாவீரர் நாளை நினைவுகூருகிறது, அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூருவதுடன், ஆலயச் சுவர்களில் தமிழீழத்தின் வரைபடமும் செதுக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழர்களிடையே முருகன் வழிபாடு எவ்வாறு ஒரு ஆறுதல் தரும் தளமாக அமைகிறது, தாயகத்தையும் அதன் அரசியல் சுதந்திரத்தையும் குறித்த தொடர்ச்சியான ஏக்கத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறது, மேலும் புலம்பெயர் அகதி சமூகத்தில் பண்பாட்டுப் பாதுகாப்பிற்கான ஒரு செயல்முறையாக எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் குறித்து இந்த ஆய்வுக்கட்டுரை ஆராய்கிறது.*

**குறிப்புச் சொற்கள்:** முருகன் ஆலயம், முருகன் வழிபாடு, சுவிட்சர்லாந்து தமிழர்கள், இலங்கைத் தமிழ் அகதிகள்.

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

**முன்னுரை**

1980களின் தொடக்கத்திலிருந்து தீவிரமடைந்த இலங்கையின் உள்நாட்டுப் போர், இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே நீண்ட காலமாக நிலவி வந்த அரசியல் மற்றும் இனச் சார்ந்த முரண்பாடுகளிலிருந்து உருவானதாகும். இந்த மோதலின் மையத்தில், அரசியல் பிரதிநிதித்துவம், மொழி உரிமைகள், காலனிய மற்றும் பிந்தைய காலனிய தொழிலாளர் அமைப்புகளால் உருவான சமூகப் பாகுபாடுகள் மற்றும் தீவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்திற்கான கோரிக்கைகள் ஆகியவை இருந்தன. இலங்கை உள்நாட்டுப் போரில், தமிழ்ப் பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைகள், கட்டாய இடம்பெயர்வுகள், அன்றாட வாழ்க்கையையே சுற்றிவளைத்த தீவிரமான கண்காணிப்பு அமைப்புகள், மற்றும் இன அழிப்புத் தன்மை கொண்ட வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த நிலைமைகள் தமிழ்ப் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை நிலையற்றதாக்கின. (மாலதி, என்., 2012)

இலங்கையின் உள்நாட்டுப் போரின் பின்னணியில், இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கைகளை முன்வைத்து ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் மற்றும் இராணுவ இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் செயல்பட்டனர். 1982 நவம்பர் 27 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பக் காலத் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் சங்கர் (சத்தியநாதன்) உயிரிழந்த நிகழ்வு, அந்த இயக்கத்தின் வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பமாக அமைந்தது. இந்த நிகழ்வுக்குப் பின்னர் பல இளைஞர்கள் விடுதலை இயக்கத்தில் இணைந்தார்கள். 1989 ஆம் ஆண்டிலிருந்து, நவம்பர் 27 ஆம் தேதி ‘மாவீரர் நாள்’ என குறிப்பிடப்பட்டு, போராட்டத்தில் உயிரிழந்த விடுதலை புலி உறுப்பினர்களை ஆண்டுதோறும் நினைவுகூரும் நினைவு நாளாக உருவெடுத்தது (சிவநாயகம், எஸ்., 1995).

2009 ஆம் ஆண்டில் இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தில், முள்ளிவாய்க்கால் பகுதியில் ஈழத் தமிழ் பொதுமக்களையும் போராளிகளையும் இலங்கை இராணுவம் நெருக்கடியான நிலையில் சிக்கவைத்து, கடுமையான இராணுவ தாக்குதல்களுக்கு உட்படுத்தியது. இந்த இறுதிக்கட்டத்தில், 2009 ஆம் ஆண்டு மே 18 அன்று, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அவரது குடும்பத்தினரும், மேலும் இயக்கத்தின் நம்பிக்கைக்குரிய பலரும் உயிரிழந்ததுடன், பெருந்தொகையான தமிழ் பொதுமக்களும் உயிரிழந்தனர். இதன் விளைவாக, இனப்படுகொலை வன்முறையின் நேரடி தாக்கத்தால் மட்டுமல்லாமல், தமிழர்களின் சுயநிர்ணய அரசியல் தாயகத்திற்குள் செயல்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதன் காரணமாகவும், புலம்பெயர்வு ஒரு தவிர்க்க முடியாத யதார்த்தமாக உருவானது. இந்த வரலாற்றுப் பின்னணியில், நவம்பர் 27 மாவீரர் நாள் மற்றும் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு நாளும், புலம்பெயர் தமிழீழ சமூகங்கள் ஒன்றுகூடி நினைவுகூரவும், துயரை வெளிப்படுத்தவும், அரசியல் உணர்வுகளைப் பகிரவும் முக்கிய நாட்களாக அமைந்து வருகின்றன (பாய்ல், எப் .ஏ., 2016).

தமிழர்கள் தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறியபோது, மனக்காயங்களும் இழப்புகளும் அவர்களுடன் பயணித்தன. அதே நேரத்தில், அந்தக் கடுமையான சூழலிலும் வாழ்க்கையைப் பற்றிக்கொள்ள உதவிய பலவகையான ஆறுதல் மற்றும் பற்றுதல் வடிவங்களையும் அவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்றனர். அவற்றுள், மனித நிலைகளையும் வாழ்க்கையின் எல்லைகளையும் கடந்து நிற்கும் சக்திகளில் அடிக்கல் வைத்த நம்பிக்கைகளும் முக்கிய இடம் பெற்றன. வீடு, தாயகம், உறவுகள், மொழி, சமூக வாழ்வு ஆகியவை சிதைந்தபோதிலும், அவற்றைக் கடந்து நீடித்த ஆறுதல் வடிவங்களின் பின்னணியிலேயே, இடம்பெயர்வு நிகழும் பல தளங்களிலும் புலம்பெயர் தமிழ் சமூகங்களுடன் முருகன் வழிபாடு

இணைந்து பயணிக்கிறது. தென்னாப்பரிக்காவில் வாழும் தமிழர்களின் வரலாரையும் அவர்களின் முருக பக்தியையும் கோடிட்டு காட்டிய ஆராச்சியாளர்கள் (கோவேந்தர், கா. எ., மற்றும் ந. முதலி., 2025), இந்த ஆய்வில் சுவிஸ் நாட்டில் வாழும் தமிழர், அவர் மரபு, வரலாறு மற்றும் முருகனின் பற்றுதலை ஆய்வு படுத்தியுள்ளனர்.

**சுவிஸ் தமிழர்கள் வரலாறு**

1980கள் மற்றும் 1990கள் காலகட்டத்தில், இலங்கையின் உள்நாட்டுப் போரிலிருந்து தப்பிச் செல்லும் நோக்கில், இலங்கைத் தமிழர்கள் உலகின் பல நாடுகளில் தஞ்சம் நாடியதில், சுவிட்சர்லாந்து ஒன்றாக இருந்தது. 2020களில் சுவிட்சர்லாந்தில் சுமார் 50,000 வரை இலங்கைத் தமிழர்கள் வசித்து வருகின்றனர். இதன் மூலம், ஐரோப்பாவில் உள்ள மிகப் பெரிய இலங்கைத் தமிழ் சமூகங்களில் ஒன்றாக இது உருவெடுத்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் சுவிட்சர்லாந்துக்கு வந்த காலகட்டம், இதற்கு முன் அந்நாடு பெரிதளவில் அகதி வருகைகளை சந்திக்காத ஒரு நேரமாக இருந்தது. இதன் காரணமாக, அந்த மக்களின் இன்னல்களை கருத்தில் கொண்டு அகதி மற்றும் தஞ்சம் தொடர்பான நடைமுறைகளை சுவிட்சர்லாந்து படிப்படியாக உருவாக்கத் தொடங்கியது. (அல்லூரி, ஆர். எம்., 2023)

ஆரம்ப காலத்தில் சுவிட்சர்லாந்திற்கு வந்த தமிழர்கள் பல்வேறு சமூக மற்றும் அரசியல்–நிர்வாகம் சார்ந்த சவால்களை எதிர்கொண்டனர். அந்தக் காலகட்டத்தில், சுவிஸ் சமூகத்தில் தமிழர்களை நோக்கி சந்தேகப் பார்வை, இனவழி பாகுபாடு, மற்றும் அந்நியர்கள் மீது விரோத மனப்பாங்கு ஆகியவை பரவலாக நிலவின. 1980களின் நடுப்பகுதியில், தஞ்சம் கோரிய தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை கையாள்வதற்காக, சுவிஸ் அதிகாரிகள் சிறப்பு அகதி நடைமுறைகளை அறிமுகப்படுத்தினர். சட்ட ரீதியான அங்கீகாரம் பல சந்தர்ப்பங்களில் வரையறுக்கப்பட்டதாக இருந்ததால், பல தமிழர்கள் நீண்ட காலம் அகதி முகாம்களில் தங்கியிருந்ததோடு, சட்ட ரீதியான நிலைத் தெளிவின்மையுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

காலப்போக்கில், சுவிட்சர்லாந்தின் குடியேற்றம் மற்றும் அகதி தொடர்பான கொள்கைகள் மாற்றமடைந்தன. 1990களிலிருந்து கணிசமான எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழர்களுக்கு B வகை குடியிருப்பு அனுமதி வழங்கப்பட்டது. இதன் மூலம் அவர்கள் சட்டப்பூர்வமாக சுவிட்சர்லாந்தில் தங்கவும் வேலை செய்யவும் முடிந்தது. இதனைத் தொடர்ந்து, ஒரு பகுதி நிரந்தர குடியிருப்பு அனுமதியையும், பின்னர் சுவிஸ் குடியுரிமையையும் பெற்றது. குடும்ப மீளிணைவு தொடர்பான கொள்கைகள் அமல்படுத்தப்பட்டது. அவற்றின் மூலம், சுவிட்சர்லாந்தில் ஏற்கனவே தங்கி வாழ்ந்த சமூக உறுப்பினர்கள் தங்களின் நெருங்கிய உறவினர்களை சுவிஸ் நாட்டிற்கு அழைத்துவர முடிந்தது. இதனால், குடும்ப வாழ்க்கை நிலைபெறுவதற்கும், நீண்டகால குடியேற்றம் உறுதிப்பெறுவதற்கும் வழி ஏற்பட்டது.

தற்காலிக இடம்பெயர்வாக இருந்த வாழ்க்கை, காலப்போக்கில் நிலைத்த நீண்டகால குடியேற்றமாக மாறத் தொடங்கிய நிலையில், சமூகக் கூடுகை, உணர்ச்சிபூர்வமான ஆதரவு, சடங்கு நடைமுறைகள், மற்றும் பண்பாட்டுத் தொடர்ச்சி ஆகியவற்றிற்கு இடமளிக்கக்கூடிய தளங்களின் தேவை தெளிவாக வெளிப்படத் தொடங்கியது. சுவிட்சர்லாந்தில் நிலவிய சமூக வாழ்வில், மாலை நேரங்கள், வார இறுதிகள், மற்றும் ஓய்வு நேரங்கள் ஆகியவை, தமிழர்கள் இலங்கையில் பழகியிருந்த சமூக மற்றும் பொழுதுபோக்கு வாழ்விலிருந்து கணிசமாக மாறுபட்டவையாக இருந்தன. இதனால், தங்களுக்குப் பரிச்சயமான கூட்டு வாழ்வையும், ஆறுதலையும், தங்களது நினைவுகளோடு இணைந்த சமூக உணர்வையும் மீண்டும் அனுபவிக்கக்கூடிய இடங்களை தமிழர்கள் தேடத் தொடங்கினர். மதச் சார்ந்த இடங்கள், வழிபாட்டிற்கான தளங்களாக மட்டுமே இல்லாமல், தமிழர்களின் சமூக மற்றும் பண்பாட்டு

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

வாழ்வுடன் தொடர்புடைய கூடுகை இடங்களாகவும் செயல்பட்டன. இவ்விடங்கள், சமூக வாழ்வு மற்றும் நினைவுகளைப் பகிரும் வாய்ப்புகளை உருவாக்கின. அகதித்தன்மை, குடியேற்றம் மற்றும் சமூக உருவாக்கம் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த வரலாற்றுச் சூழலாக உருவானவை. இத்தகைய பின்னணியிலேயே, சுவிட்சர்லாந்தில் முருகன் வழிபாடு எவ்வாறு நிலைபெற்றது என்பதையும், அதன் தொடர்ச்சியாக முருகன் ஆலயங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வகை சமூக–மத உருவாக்கத்தின் ஒரு பிரதிநிதித் தளமாகவே, பேர்ண் முருகன் ஆலயம் அமைந்துள்ளது. தற்போது, சுவிட்சர்லாந்தில் “இந்துமதம்” என்பது பெரும்பாலும் தமிழ் இந்துக்களை குறிப்பதாகப் பொருள்படுகிறது. ஏனெனில், அந்நாட்டில் உள்ள இந்து கோவில்களில் பெரும்பாலானவை தமிழர்களால் நிறுவப்பட்டவை ஆகும்; மொத்தமாக 22-க்கும் மேற்பட்ட தமிழ் கோவில்கள் அங்கு காணப்படுகின்றன. (பௌமான், எம்., 2020)

**சுவிஸ் நாட்டில் பேர்ண் நகரில் முருகன் வழிபாடு**

1990களின் தொடக்கக் காலத்தில், பேர்ண் நகரில் தமிழ் வழிபாடு நிலவிய விதம், ஏற்கனவே இருந்த இந்து வழிபாட்டுத் தளங்களுக்குள் தான் அமைந்திருந்தது. குறிப்பாக, வாரத்தின் சில குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே பக்தி நிகழ்வுகள் நடைபெறும் சாயிபாபா ஆலயம், அக்காலத்தில் தமிழர்கள் வழிபாடு மேற்கொள்ளும் முக்கியமான இடமாக இருந்தது. 1980களில் சுவிட்சர்லாந்திற்கு புலம்பெயர்ந்த முதல் தலைமுறை இலங்கைத் தமிழர்களில் ஒருவரான ரவி குறிப்பிட்டதுபோல், அந்நாட்டு சமூக வாழ்வு, புதிதாக வந்த தமிழர்களுக்கு அறிமுகமற்ற பொழுதுபோக்கு நடைமுறைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. சுவிஸ் சமூகத்தில், மாலை நேரங்களும் வார இறுதிகளும் பொதுவாகப் பூங்காக்களில் பொழுதைக் கழித்தல், விளையாட்டு நடவடிக்கைகள், அல்லது பொது வெளிகளில் அலைந்து திரிதல் போன்ற பொழுதுபோக்கு செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. இத்தகைய சமூக அமைப்பு, புதிதாக வந்த புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அறிமுகமற்ற ஒன்றாகவே இருந்தது. உறவுமுறைச் சார்ந்த விரிவான குடும்பக் கட்டமைப்புகளும், பண்பாட்டு ரீதியாக பழகிய கூட்டு சமூக வாழ்வும் இல்லாத சமூகச் சூழலில், காலத்தையும் சமூக உறவுகளையும் அமைக்கும் முக்கியமான தளங்களாக ஆலயங்கள் உருவெடுத்தன.

சாயிபாபா ஆலயம் தொடக்க நிலையில் வழிபாட்டிற்கான இடமாக செயல்பட்டபோதிலும், தமிழ் மொழிப் பாடல்கள், தமிழ்ச் சடங்கு நடைமுறைகள் மற்றும் கூட்டு வழிபாட்டு வடிவங்களை ஏற்றுக்கொள்ள இயலாததால், தமிழர்களுக்கே உரிய மத வாழ்வுக்கு ஏற்ற ஒரு தனித்துவமான மத நிறுவனம் அவசியம் என்ற விவாதம் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே உருவானது. இவ்வாறு உருவான தேவையை வெளிப்படுத்துவதில் செல்வி மகேசன் சுகர்தினி (திருமதி சுவேந்திரன்) முக்கியப் பங்கு வகித்தார். புலம்பெயர் சூழலில் தமிழ்ச் சடங்கு நடைமுறைகளும் பக்தி மரபுகளும் தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தினார். அவரது சகோதரர் மனோகரனுடன் இணைந்து, பீயல் நகரைச் சேர்ந்த சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் அவர்களின் வழிகாட்டுதலுடன், ஒரு முருகன் ஆலயத்தை நிறுவ வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் நிலவிய நிறுவன ரீதியான தடைகளும் நிதி மற்றும் இட வசதி குறைபாடுகளும் காரணமாக, அம்மன் ஆலயத்தை நிறுவுவது சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக, முருகன் முதன்மைத் தெய்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து திரு ஆறுமுக பரமேஸ்வரன் இம்முயற்சிகளில் இணைந்தார். வழிபாட்டிற்குத் தகுந்த இடத்தைத் தேடும் பணியும் இதனுடன் தொடங்கப்பட்டது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

**படம் 1: பேர்ண் நகரில் முருகன் கோவிலின் எளிய தொடக்கம்**



1992 ஏப்ரல் 13 அன்று, தமிழ் புத்தாண்டுடன் இணைந்து, ஆலய உருவாக்கத்தின் முதல் கட்டம் தொடங்கியது. சிவஸ்ரீ சுகுமார் சர்மா அவர்களின் ஆசீர்வாதத்துடன், ஒரு முருகன் உருவம் நிறுவப்பட்டது. சமூகத் தொடர்புகளின் வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக இடத்தில், வழிபாடுகள் முறையாக ஆரம்பிக்கப்பட்டன. இதுவே பேர்ண் நகரில் ஒழுங்கமைந்த முறையில் முருகன் வழிபாடு தொடங்கியதற்கான ஆரம்பமாக அமைந்தது. அதே ஆண்டின் செப்டம்பர் மாதத்தில், ‘வெரைன் முருகன் ஆலயம்’ என்ற பெயரில், சுவிஸ் சிவில் சட்டத்தின் 60–79ஆம் பிரிவுகளின் கீழ், ஆலயம் ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டது. தொடக்கத்திலிருந்தே, இந்தச் சங்கம் வழிபாட்டை மையமாகக் கொண்டதுடன், தமிழ் பாடசாலை, நடன வகுப்புகள், மாதர் சங்கம் மற்றும் வாசகசாலை ஆகியவற்றையும் உள்ளடக்கிய பல்நோக்கு நிறுவனமாகக் கருதப்பட்டது. ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபை அமைக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள், ஆலயத்தின் ஆரம்ப நிதி ஆதாரமாக அமைந்தன. இதன் மூலம், சிதறிய நிலையில் இருந்த பக்தி நடைமுறைகள், நிறுவன ரீதியான நிலைத்த வடிவமாக மாற்றம் பெறத் தொடங்கின.

இந்தக் காலகட்டத்தில் முருகன் வழிபாட்டின் முக்கியத்துவம், மனோகரி வழங்கிய உரையின் மூலம் வெளிப்படுகிறது. 2016 இல் தென் ஆப்ரிக்காவில் நடைபெற்ற சர்வதேச முருகன் மாநாட்டில், சுவிட்சராந்திலிருந்து வந்த ஒரு புலம்பெயர்ந்த தமிழராக அவர் தனது அனுபவத்தைப் பொதுவெளியில் எடுத்துரைத்தார். ஆலயம் உருவாகிக் கொண்டிருந்த ஆரம்ப ஆண்டுகளில் சுவிட்சராந்திற்கு புலம்பெயர்ந்த ஒருவராக, இடம்பெயர்வும் நிச்சயமற்ற சூழல்களும் நிலவிய காலத்தில், முருகன் பக்தியே தன்னை நிலைநிறுத்திய ஆதாரமாக இருந்ததாக அவர் கூறினார். காலம் கடந்தபின்பும், சமூக வாழ்வில் நிலைத்தன்மை ஏற்பட்ட பின்னரும், இந்தப் பக்தி தளரவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பல தசாப்தங்களுக்குப் பின்னரும், தனது திசையும், ஆறுதலும், சேர்ந்திருக்கும் உணர்வும் முருகன் வழிபாட்டின் வழியாகவே அமைந்துவருகின்றன என்றும் அவர் விளக்கினார். இதன் மூலம், முருகன் வழிபாடு புலம்பெயர்வுக்கான தற்காலிகப் பதிலாக அல்லாது, இடம்பெயர்வு, குடியேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு ஆகியவற்றை உலகளாவிய தமிழ் மதச் சூழலில் தொடர்ந்து பேணும் ஒரு நிலைத்த கட்டமைப்பாக அமைவதை இந்த உரை வெளிப்படுத்துகிறது.

அதே ஆண்டின் செப்டம்பர் மாதத்தில், ‘Verein Murugan Temple’ என்ற பெயரில், சுவிஸ் சிவில் சட்டத்தின் 60–79 ஆம் பிரிவுகளின் கீழ், ஆலயம் ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டது. தொடக்கத்திலிருந்தே, இந்தச் சங்கம் வழிபாட்டை மையமாகக் கொண்டதுடன், தமிழ்

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

பாடசாலை, நடன வகுப்புகள், மாதர் சங்கம் மற்றும் வாசகசாலை ஆகியவற்றையும் உள்ளடக்கிய பல்நோக்கு நிறுவனமாகக் கருதப்பட்டது. ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சபை அமைக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள், ஆலயத்தின் ஆரம்ப நிதி ஆதாரமாக அமைந்தன. இதன் மூலம், சிதறிய நிலையில் இருந்த பக்தி நடைமுறைகள், நிலைத்த மற்றும் நிறுவன ரீதியான வடிவமாக மாற்றம் பெறத் தொடங்கின.

ஆலயச் சமூகத்தின் அளவு விரிவடைந்ததுடன், ஒரு ஒழுங்கமைந்த நிர்வாகக் கட்டமைப்பும் உருவெடுக்கத் தொடங்கியது. திரு ஆறுமுக பரமேஸ்வரன் தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டு, நிரந்தர வழிபாட்டு இடம் ஒன்றை உறுதி செய்யும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. வெள்ளிக்கிழமை வழிபாடுகள் முறையாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. பக்தர்களின் இல்லங்களிலிருந்து பிரசாதம் பகிரப்பட்டு வந்தது. சரஸ்வதி பூஜை, நவராத்திரி போன்ற மத மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. 1993ஆம் ஆண்டில், நடன வகுப்புகளும் மாதர் சங்கமும் முறையாக நிறுவப்பட்டன. அதே காலகட்டத்தில், ஆலயத்தின் செயலராக இருந்த ஒருவரால் ஒரு பக்தி தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது. இந்த முன்னேற்றங்கள், சுவிட்சர்லாந்தில் முருகன் வழிபாடு மதச் செயல்பாடாக மட்டுமே அல்லாமல், புலம்பெயர் தமிழர்களின் பண்பாட்டு மற்றும் சமூக வாழ்வைத் தாங்கி நிறுத்தும் முக்கியமான அடிப்படையாகவும் செயல்பட்டதை காட்டுகின்றன.

ஆலயத்தின் இரண்டாவது பரிணாம வளர்ச்சி, தொடர்ச்சியான முயற்சி, சமூக ஒத்துழைப்பு மற்றும் நிறுவன ஆதரவின் அடிப்படையில் உருவான ஒரு முக்கியக் கட்டமாகக் காணப்படுகிறது. அயராத முயற்சியின் பயனாக BUMPLI 2 STRASSE 21 என்ற இடத்தில் ஆலயத்திற்கான தற்காலிக இடம் பெறப்பட்டது. 18 ஜூலை 1993 அன்று நடைபெற்ற இரண்டாவது பொதுக்கூட்டத்தில், முந்தைய நிர்வாகக் குழுவே மீண்டும் தேர்வு செய்யப்பட்டது. நிதி தேவையை எதிர்கொள்ள ஏழு பேர் கொண்ட நிதிக் குழு அமைக்கப்பட்டு, பேர்ன் மாநகர சபையிடம் நிதியுதவி கோரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கரிதாஸ் தொண்டு நிறுவனம் ஆலயத்திற்கு இடம் தேடுவதிலும் நிதி ஆதரவு வழங்குவதிலும் முக்கிய பங்காற்றியது. 1994ஆம் ஆண்டு பொங்கல் விழா நடத்தப்பட்டு, நிதி திரட்டும் நோக்கில் பற்று சீட்டு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

மூன்றாவது பரிணாம வளர்ச்சிக் காலத்தில், கரிதாஸ் நிறுவனத்தின் மூலம் 450 சதுர மீட்டர் பரப்பளவுடைய இடம் பெறப்பட்டது. இதே காலகட்டத்தில், 1994 பொங்கல் விழாவின் போது நிர்வாக சபையினருக்கும் மாதர் சங்கத்தினருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நிர்வாக அமைப்புகள் கலைக்கப்பட்டன. பின்னர் 04 ஏப்ரல் 1994 அன்று புதிய நிர்வாகம் தேர்வு செய்யப்பட்டது. அதே ஆண்டில், விநாயகர், அம்மன் மற்றும் நவக்கிரக விக்கிரகங்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு, 15 ஜூலை 1994 அன்று சிலை பிரதிஷ்டையும் குடமுழுக்கும் நடைபெற்றது. எனினும், துப்புரவு, வாகன நிறுத்தம் மற்றும் பூஜை நேர ஒழுங்குகள் தொடர்பான முரண்பாடுகள் காரணமாக கரிதாஸ் நிறுவனத்துடனான உறவில் சிக்கல்கள் ஏற்பட்டன. இதையடுத்து, இடப்பற்றாக்குறை காரணமாக புதிய ஆலய இடம் தேடும் முயற்சி தீவிரமானது.

2001 முதல் ஆலயம் ஒரு நிர்வாக ரீதியான நிலைத்தன்மையை அடையத் தொடங்கியது. சுவிஸ் நாட்டுப் பெண்மணிகளின் உதவியுடனும், பேர்ன் மாநகர சபையில் பணியாற்றிய திருமதி சீவரட்ணராசாவின் ஒத்துழைப்புடனும் Bahn Strasse 21 என்ற இடத்தில் ஐந்து ஆண்டு ஒப்பந்தம் பெறப்பட்டது. நிரந்தர துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, நிர்வாக குழு தர்மகர்த்தா சபையாக மாற்றப்பட்டது. 09 செப்டம்பர் 2002 அன்று புனராவர்த்தன பிரதிஷ்டா

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்திய பக்தர்களின் உதவியால் பல உற்சவ மூர்த்திகளும் வாகனங்களும் ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தொடர்ந்து, பத்து நாட்கள் மஹோற்சவம், கந்த சஷ்டி, ஐயப்பன் விரதம் போன்ற வழிபாட்டு நிகழ்வுகள் முறையாக நடைபெறத் தொடங்கின.

நான்காவது பரிமாணத்தில், ஆலயத்திற்கு சொந்தமான நிலம் பெறும் முயற்சி முக்கிய முன்னேற்றத்தை அடைந்தது. 17 ஆகஸ்ட் 2009 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், சொந்த இடம் தேட பத்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. சட்ட ஆலோசனையின் உதவியுடன் ஆலயத்தின் சட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டு, தொப்பன் கிராமத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டது. 23 நவம்பர் 2012 அன்று நிலம் பதிவு செய்யப்பட்டு, அவசர தேவைக்காக சிறிய மண்டபம் கட்டப்பட்டது. 28 ஜூன் 2013 அன்று Bahn Strasse 21 இலிருந்து புதிய இடத்திற்கு பாலஸ்தானம் செய்யப்பட்டது.

**படம் 2: கல்யாண முருகனின் கருங்கல் சிலை**




ஐந்தாவது பரிணாம வளர்ச்சி, சமூக அர்ப்பணிப்பின் உச்சமாக விளங்குகிறது. 1992 முதல் 2015 வரை நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்கு முன்பாக, சுமார் 20–25 குடும்பங்கள் இடைவிடாத உழைப்பையும் ஆதரவும் வழங்கினர். பேர்ன் நகரிலிருந்த தமிழர்கள் தங்களது ஓய்வு நேரத்தை ஆலய பணிக்காக அர்ப்பணித்தனர். எதிர்கால நோக்கில், திருமண மண்டபம், சைவ உணவகம் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் உருவாக்கப்பட வேண்டிய தேவையும், இளைய தலைமுறையை ஆலய நிர்வாகத்திற்கு தயார்படுத்த வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக, ஆலயத்தின் இணையதளம் (www.bernmurugan.ch) இளைய தலைமுறையினரின் பொறுப்பில் இயங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

2000ஆம் ஆண்டளவில், ஆலயம் சடங்கு நடைமுறைகளிலும் குறியீட்டு வெளிப்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் விரிவடைந்தது. தைப்பூசம், தேரோட்டம், கந்த சஷ்டி பூஜைகள், ஐயப்பன் பூஜைகள், பெருமளவிலான அபிஷேகங்கள் போன்ற முக்கிய விழாக்கள், அதிகமான எண்ணிக்கையிலான பக்தர்களை ஈர்த்தன. விரிவடைந்த இந்த வழிபாட்டு நாள்காட்டியில், மாவீரர் நாள் ஆண்டுதோறும் ஒரு மையமான நிகழ்வாக அமைந்துள்ளது. ஆலய வளாகத்திற்குள் நடைபெறும் இந்த நிகழ்வு, அரசியல் நினைவைக் குறித்த ஒரு தெளிவான வெளிப்பாடாக அமைகிறது. இதன் வழியாக, தமிழீழத் தன்னாட்சி என்பது முடிவடைந்த ஒரு வரலாற்றுக் கட்டமாக அல்லாமல், தொடர்ந்து நிலவும் கூட்டு நோக்கமாக முன்வைக்கப்படுகிறது. ஆலயத்திற்குள் உள்ள சுவர்களில் அமைந்துள்ள தமிழீழ

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

வரைபடம், தாயகம் மற்றும் வரலாறு குறித்த நினைவுகளை அங்கு தொடர்ந்து நிலைநிறுத்தி, எதிர்காலம் குறித்த எண்ணங்களையும் ஊட்டுகிறது. அதனால், கூட்டு வழிபாடு ஆறுதலாக மட்டுமன்றி, தாயகத்துக்கு அப்பாலும் விடுதலை தாகத்தை காண்பிக்கிறது. இதன் தொடர்ச்சியாக, இலங்கை அரசின் அழிப்பு வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட வரலாறுகளையும் எதிர்காலங்களையும் பாதுகாக்கும் தெய்வமாக முருகன் அமைகிறார். இந்நடைமுறைகள் அரசியலிலிருந்து மதத்துக்கான ஒரு விலகலைக் குறிக்கவில்லை. மாறாக, புலம்பெயர் சூழலில் அரசியல் தன்னாட்சி எவ்வாறு தொடர்ச்சியாக பேணப்படுகிறது, சடங்குகளின் வழியாக வடிவம் பெறுகிறது, மேலும் பொதுவெளியில் முன்னிலைப்படுத்தப்படுகிறது என்பதையே அவை காட்டுகின்றன.

**படம் 3: 2025 சுவிஸ் கல்யாண முருகன் ஆலயத்தில் மாவீரர் நாள் வணக்கம் (மாவீரர் பூஜை)**




**படம் 4: சுவிஸ் கல்யாண முருகன் கோவிலில் தமிழீழ வரைபடம்**



சுட்டியை போன்ற இரண்டாம் தலைமுறை சுவிஸ்-தமிழர்களின் நேர்காணல்கள், இந்நடைமுறைகள் தலைமுறை எல்லைகளை எவ்வாறு கடக்கின்றன என்பதை காட்டுகின்றன. காவடி எடுப்பதும், தேரை இழுப்பது போன்ற சடங்குகளில் பங்கேற்பது, மரபாக வந்த

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

பழக்கமாக அல்ல. தமிழ் அடையாளத்துடனும் அரசியல் வரலாறுடனும் விழிப்புணர்வுடன் இணையும் ஒரு செயற்பாடாகவே விவரிக்கப்படுகிறது. போர் அல்லது இடம்பெயர்வு அனுபவங்களை நேரடியாகக் கொண்டிராத இளம் தலைமுறையினருக்கு, சடங்கு நடைமுறைகள், உடல் வழி அனுபவம், கூட்டு நினைவு மற்றும் நிறுவனத் தொடர்ச்சி ஆகியவற்றின் மூலம், தமிழீழத்தை தொடர்ந்து நிலவும் ஒரு அரசியல் கற்பனையாக அணுகும் வழியாக அமைகின்றன.

சுவிட்சர்லாந்தில் உள்ள தமிழ் மத வாழ்வின் பரந்தப் பின்னணியில் வைத்து பார்க்கும்போது, பேர்ன்–டோஃபன் முருகன் ஆலயத்தின் முக்கியத்துவம் மேலும் தெளிவாகிறது. கிருஷ்ணன் குறிப்பிட்டதுபோல், ஐரோப்பாவில் வாழும் இலங்கைத் தமிழர்களில் கணிசமானோர் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அப்பகுதியில், ஆலய மையமான மத வாழ்வு வரலாற்று ரீதியாக சமூக ஒழுங்கமைப்பை வடிவமைத்து வந்துள்ளது. இந்த பண்பாட்டு நோக்கம், புலம்பெயர் சூழலிலும் ஆலயங்களை நிறுவ வேண்டும் என்ற நீடித்த முயற்சிகளுக்கு அடிப்படையாக அமைந்தது. அதன் விளைவாக, சுவிட்சர்லாந்தின் இருபத்தாறு கண்டோன்களிலும் தமிழ் ஆலயங்கள் அமைந்துள்ளன. இந்தச் சூழலில், பேர்ன்–டோஃபன் முருகன் ஆலயம் ஒரு விதிவிலக்காக அல்ல; சமூக உருவாக்கம், அரசியல் நினைவு மற்றும் கூட்டு எதிர்பார்ப்பின் தொடர்ச்சி ஆகியவற்றில் தமிழ் மத நிறுவனங்கள் வகிக்கும் பங்கின் ஒரு எடுத்துக்காட்டாகவே அமைகிறது.

**படம் 5: கோவிலின் கொடிமரமும் முக்கிய சந்நிதானமும்**



**படம் 6: அழகிய சுவிஸ் மண்ணில் முருகனின் கோவில்**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880




**முருக வழிபாடு, பண்பாடு, புலம்பெயர் நாட்டில் ஆறுதல்**

சுவிட்சர்லாந்தில் வாழும் இலங்கைத் தமிழர்களிடையே முருகன் வழிபாடு, புதிய புவியியல் சூழலுக்குள் மாற்றி கொண்டு வரப்பட்ட ஒரு மத வழக்கத்தின் தொடர்ச்சியாக மட்டுமே அமையவில்லை. அது, இடம்பெயர்ந்த சமூகங்கள் தங்களது அன்றாட வாழ்வை மீள அமைக்கும் ஒரு முக்கியமான பண்பாட்டு-சமூக அடித்தளமாகவும் செயல்படுகிறது. இந்தச் சூழலில், முருகன் ஆலயங்கள் வழிபாட்டு இடங்களாக மட்டுமே இல்லை. புலம்பெயர் வாழ்வில் மக்கள் தங்களது வாழ்வை எவ்வாறு நடத்த வேண்டும், எதனைச் சார்ந்து நிலைநிறுத்த வேண்டும் என்பதைக் கண்டறியும் வெளிகளாகவும் அவை மாறுகின்றன. வரலாறுடன் தங்களை இணைத்துக் கொள்ளும் உணர்வும், எதிர்காலம் குறித்த தொடர்ச்சியும் இங்கு உருவாகின்றன. முருகன் ஆலயங்களில், காலமும் சடங்கு நடைமுறைகளும் சமூக உறவுகளும் மீள ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த ஒழுங்கமைப்பு, இடம்பெயர்வு காரணமாக உருவாகும் சிதறல்களுக்கெதிராக நிற்கும் வகையில் அமைகிறது. இதன் மூலம் கிடைக்கும் ஆறுதல், தனிப்பட்ட உணர்ச்சிகளுக்குள் மட்டுமே அடங்கியதல்ல. அது வெறும் உளவியல் தளத்திலும் நின்றுவிடுவதில்லை. இந்த ஆறுதல், விழாக்கள், உடல் வழி சடங்குகள், நினைவு நிகழ்வுகள், மற்றும் முருகன் ஆலயங்களின் நிறுவன வாழ்க்கையில் இடம்பெறும் பங்கேற்பு ஆகியவற்றின் வழியாக உருவாகிறது. இந்நடைமுறைகள், தனிநபர்களையும் குடும்பங்களையும், தொடர்ச்சியும் சேர்ந்திருப்பும் கொண்ட ஒரு கூட்டு வாழ்வு ஓட்டத்துக்குள் வைத்திருக்கின்றன. இந்த அர்த்தத்தில், முருகன் வழிபாடு புலம்பெயர் வாழ்வை தாங்கி நிறுத்தும் ஒரு பண்பாட்டு கட்டமைப்பாக செயல்படுகிறது. அதே நேரத்தில், அந்த வாழ்வின் மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மையையும் அது தக்கவைத்துக் கொள்கிறது. அதே நேரத்தில், முருகன் வழிபாட்டின் ஆறுதல் தரும் பங்கு, அதன் அரசியல் மற்றும் வரலாற்று பரிமாணங்களிலிருந்து பிரிக்க முடியாதது என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. மாவீரர் நாளின் கடைப்பிடிப்பு, புனித வெளிக்குள் தமிழீழத்தின் பதிப்பு, மற்றும் தலைமுறைகளைத் தாண்டி சடங்கு பங்கேற்பு பரிமாறப்படுவது போன்ற முருகன் ஆலய நடைமுறைகள், புலம்பெயர் சூழலில் மத வாழ்வு அரசியல் நினைவையும் கூட்டு

எதிர்காலக் கனவையும் தொடர்ந்து உயிருடன் வைத்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வகையில், முருகன் வழிபாடு தாயகத்திலிருந்து விலகலைச் சுட்டுவதில்லை. அதேபோல், தமிழ் அடையாளம் அரசியலற்றதாக மாறிவிடுகிறது என்பதையும் அது குறிக்கவில்லை. மாறாக, புலம்பெயர் சூழ்நிலைகளுக்குள் தமிழீழத் தன்னாட்சியை மீள அமைக்கும் ஒரு வழியாகவே முருகன் வழிபாடு செயல்படுகிறது. காவடி எடுப்பதும், அலகு குத்துதல் போன்ற உடல் வழி சடங்குகளும் இங்கு முக்கிய இடம் பெறுகின்றன. இவை வெறும் பக்திச் செயல்களாக மட்டுமே அமையவில்லை. அனுபவிக்கப்பட்ட வன்முறை, இழப்பு, மற்றும் இடம்பெயர்வு ஆகியவை உடலின் நினைவாகத் தங்கியிருப்பதை வெளிப்படுத்தும் வழிகளாகவும், அதே நேரத்தில் எதிர்கால தலைமுறைகளுக்கான வேண்டுதலாகவும் இச்சடங்குகள் அமைகின்றன. இவ்வாறு, தனிநபர் உடலே நினைவின் இடமாக மாறுகிறது; அந்த நினைவு கூட்டு வழிபாட்டின் மூலம் அடுத்த தலைமுறைகளுக்குப் பரிமாறப்படுகிறது. இந்தச் சூழலில், ஆறுதல் என்பது முடிவையோ கைவிடுதலையோ குறிக்கவில்லை. அது, இடம்பெயர்வைத் தாங்கிக் கொண்டே, வரலாறு, மரியாதை, மற்றும் அரசியல் எதிர்காலம் குறித்த உரிமைக் கோரிக்கைகளைத் தொடர்ந்து பேணும் திறனையே குறிக்கிறது. மதம், பண்பாடு, மற்றும் அரசியல் நினைவு சந்திக்கும் இடத்தில் முருகன் வழிபாட்டை வைத்து பார்க்கும்போது, புலம்பெயர் முருகன் ஆலயங்கள் இழப்பையும் தொடர்ச்சியையும் ஒன்றாகத் தாங்கும் வெளிகளாக செயல்படுகின்றன என்பது தெளிவாகிறது. இங்கு தாயகம் கைவிடப்படுவதுமில்லை; கடந்த காலத்தில் உறைந்துவிடுவதுமில்லை. மாறாக, அது நினைவுகூரப்பட்டு, மீண்டும் மீண்டும் கற்பனை செய்யப்பட்டு, தற்போதைய வாழ்வில் செயல்படும் ஒன்றாகவே அமைகிறது.

**முடிவுரை**

புலம்பெயர் சூழலில் மத நடைமுறைகள் எவ்வாறு வரலாறு, நினைவு, மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை ஒன்றாகக் கட்டியெழுப்புகின்றன என்பதைப் புரிந்துகொள்ள, இவ்வகை நுணுக்கமான, இடம்சார் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இத்தகைய ஆய்வுகள் அவசியமானவை. குறிப்பாக, முருகன் ஆலயங்கள் போன்ற நிறுவனங்கள், இடம்பெயர்வு அனுபவங்களை எவ்வாறு சமூக வடிவங்களாக மாற்றுகின்றன என்பதை ஆவணப்படுத்தும் முயற்சிகள், புலம்பெயர் ஆய்வுகளின் பரப்பை மேலும் விரிவுபடுத்துகின்றன.

**குறிப்புகள்**

[1] அல்லூரி, ஆர். எம். “அரசியல் பணப்பரிவர்த்தனைகள்: போர் பிந்தைய காலத்தில் சுவிட்சர்லாந்து வாழ் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் மாற்றம்.” சமூக நடைமுறைகளாகவும் மாற்றத்தின் செயற்பாட்டாளர்களாகவும் பணப்பரிவர்த்தனைகள், தொகுத்தவர் எஸ். மையர் மற்றும் சி. ஸ்ட்ரோலே, பால்கிரேவ் மெக்மில்லன், 2023. https://doi.org/10.1007/978-3-030-81504-2_17

[2] பௌமான், எம். “சுவிட்சர்லாந்தில் இந்துமதம்.” ஐரோப்பாவில் இந்துமதத்தின் கையேடு, பிரில், 2020. https://doi.org/10.1163/9789004432284_063

[3] பாய்ல், எப். ஏ. இலங்கை மேற்கொண்ட தமிழ் இனப்படுகொலை: சர்வதேச சட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க உலகம் தவறியமை. கிளாரிட்டி பிரஸ், 2009.

[4] கோவேந்தர், கா. எ., மற்றும் ந. முதலி. “தென் ஆப்பிரிக்காவில் முருகன் வழிபாடும் தைப்பூசமும்.” பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 2, 2025.

[5] மாலதி, என். என் நாட்டிலொரு நொடிக்காலத் தருணம்: விடுதலைப் புலிகளின் நடைமுறையில் இயங்கிய (டி-ஃபாக்டோ) அரசின் கடைசி ஆண்டுகள். கிளாரிட்டி பிரஸ், 2012.

[6] சிவநாயகம், எஸ். இலங்கை: வரலாற்றின் சாட்சியாக-ஒரு பத்திரிகையாளரின் நினைவுக் குறிப்புகள். சவுத் ஏஷியா புக்க்ஸ், 1995.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இந்த ஆய்வுக் கட்டுரையைத் திருத்திய முனைவர் த**.** செபுலோன் பிரபு துரை அவர்களுக்கு மனமார்ந்த நன்றி**.**

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்**.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.